**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 618/2004**

Deposition of **<u>P.W.-1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench clerk of this court, on 17.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வக்குமார் Fathers Name : லேட்.கிருஷ்ணன்

துவக்க நேரம் : 12.48P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**:

1. இந்த வழக்கில் நான் 2-ஆம் வாதி என்றால் சரிதான். 1-ஆம் வாதி சின்னப்பொண்ணு எனது தாயார் என்றாலும், 3-ஆம் வாதி ராமசாமி எனது சித்தப்பா என்றாலும் சரிதான். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் சான்று, கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தாவின் பெயர் என்ன என்றால் பொன்மலை கவுண்டர்.

2. தாவா சொத்துக்கள் எவ்வாறு எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் பூர்விக சொத்துக்கள். என் தாத்தா பொன்மலைக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது தகப்பனார் கிருஷ்ணன், ராமசாமி, ராஜேந்திரன் ஆகிய 3 ஆண்வாரிகளும், 2 பெண்

வாரிசுகளும் ஆவார்கள். மேற்படி 2 பெண் வாரிசுகளின் பெயர்கள் என்ன என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் தற்பொழுது வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 பெண் வாரிசுகளையும் எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஒருவரை தகர கல்லாநத்தம் கிராமத்திலும், மற்றொருவரை நரசிங்கபுரம் அக்ரஹாரம் கிராமத்திலும் திருமணம் செய்து கொடுத்தனர். மேற்படி இருவரும் உயிருடன் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். மேற்படி இருவரையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3. இந்த தாவாவை பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனவே சொத்தில் உரிமை உள்ள அனைவரையும் சேர்க்காததால், அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காத தோஷத்தினால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா ராஜேந்திரன் எங்கு உள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்யும்பொழுது அவர் காணாமல் போய்விட்டார் என்று குறிப்பிட்டுள்ளோம், ஆனால் தற்பொழுது அவர் உயிருடன் இல்லை. மேற்படி ராஜேந்திரனின் இறப்பு சான்றிதழ் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி ராஜேந்திரன் உண்மையிலேயே இறந்திருந்தால் மேற்படி இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

4. மேற்படி ராஜேந்திரனுக்கு திருமணமாகி வாரிசுகள் உள்ளனரா என்றால் உள்ளனர். மேற்படி வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனவே இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்துக்களை அளவீடு செய்தபொழுது யார், யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், ஆனந்தன், செல்வி, அமுதலட்சுமி ஆகிய மூவரும் ஆக்கிரமிப்பு செய்ததாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு அதனடிப்படையில்

வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ததில் யார் யார் எவ்வளவு நிலம் ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிய வந்தது என்றால் அமுதலட்சுமி 70 சதுரடி நிலமும், ஆனந்தன், செல்வி இருவரும் 440 சதுரடி நிலமும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிய வந்தது. நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்த பின்னிட்டுதான் மேற்கண்ட ஆக்கிரமிப்பு பற்றிய விவரங்கள் தெரிய வந்தது என்றால் சரிதான்.

6. இந்த வழக்கை நாங்கள் முதலில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிதான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பொழுது தாவா சொத்திலிருந்த ஆக்கிரமிப்புகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் வழக்கு சொத்தை பிரதிவாதிகள் சேதப்படுத்தியதால்தான் அவர்களுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்தோம். தாவா வழக்குரையில் பிரதிவாதிகள் எந்த தேதியில் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை.

7. ஆனந்தன், செல்வி, அமுதலட்சுமி ஆகியோர்களுடன் சமாதானமாகியுள்ள நிலையில் அவர்களுக்கு கிரயப்பத்திரம் ஏதேனும் எழுதிக் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ள சொத்தில் ஆனந்தன், செல்வி இருவரும் ஒரு மெத்தை வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இடமானது அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்ட நிலம் என்றால் சரிதான். மேற்படி நிலம் அரசாங்கத்தின் மூலம் ஆனந்தன், செல்வி, அமுதலட்சுமிக்கு வழங்கப்பட்ட நிலங்கள் என்றாலும், தாவா சொத்துக்கள் அவர்களது ஆக்கிரமிப்பில் இல்லை என்றால் சரியல்ல. தேவையற்ற நபர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ள காரணத்தினால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.20 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.618/2004, Dt.17.03.2026.